DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 226/2025

Deposition of Witness for P.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | விக்னேஷ்வரன் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | கருப்பையா | **தொழில்** | : | |
| **ஊர்** | : | | **வயது** | : | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 01.12.2025.

எதிரி ஆஜர்.

நான் இந்த வழக்கில் புகார்தாரர் நிறுவனத்தில் உதவி மேலாளர்(சட்டம்) ஆக கடந்த எட்டு ஆண்டுகளாக பணிபுரிகிறேன். எனக்கு வழக்கு விபரங்கள் கோப்பின் அடிப்படையில் தெரியும். எனக்கு புகார்தாரர் நிறுவனம் பொது அதிகார ஆவணம் தேதி 28.10.2022 வழங்கியுள்ளார்கள். அதன்படி புகார்தாரர்க்காக நான் இந்த புகாரை தாக்கல் செய்தேன். புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு எனது நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதன் விபரங்கள் என் வழக்கறிஞருக்கு நான் விபரம் கூறி அவரால் தயார் செய்யப்பட்டு என்னால் கையொப்பம் செய்யப்பட்டதாகும். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக பதிய கோருகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | தன்மை |
|---|---|---|---|
| 1. | 28.10.2022 | புகார்தாரர் பு.சா.1க்கு கொடுத்த பொது அதிகார பத்திரம் | நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது) |
| 2. | 19.12.2024<br>30.04.2011 | எதிரியின் கணக்கு பேரேடு, சாட்சிய சட்ட பிரிவு 65 பி சான்றிதழுடன் | கணிணி பிரதி/அசல் |
| 3. | 28.01.2025 | எதிரி புகார்தாரருக்கு ரூ.1,86,016/-க்கு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, சாத்தூர் கிளை காசோலை எண். 381848 | அசல் |
| 4. | 30.01.2025 | ஆக்ஸிஸ் பாங்க் புகார்தாருக்கு வழங்கிய குறிப்பாணை | அசல் |
| 5. | 17.02.2025 | புகார்தாரர் எதிரிக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது | அலுவலக நகல்/அசல் |
| 6. | 19.02.2025 | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |

புகாரை விசாரித்து எதிரியை தண்டித்து இழப்பீடு வழங்குமாறு பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.